**ஸ்ரீ சிவசுப்பிரமணிய நாடார் பொறியியல் கல்லூரியின்**
**சாரல் தமிழ் மன்றம் மற்றும்**

**தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் இணைந்து நடத்திய**

**கலைஞர் நூற்றாண்டு விழாவின்**

## அறிக்கை

நவம்பர் 7, 2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம் காலவாக்கம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய **நாடார்** பொறியியல் கல்லூரியின் சாரல் தமிழ் மன்றமும், தொழில் நுட்பக் கல்வி இயக்ககமும் இணைந்து கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டிகள் கல்லூரியின் சிறிய கேளரங்கத்தில்(Mini Auditorium) நடத்தப்பட்டன. கலைஞரின் வரலாற்றை பறைசாற்றும் வகையில் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.






தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவில் விருந்தினர்களாக

கல்லூரியின் முதல்வர்  முனைவர் வயி.அண்ணாமலை அவர்களும் சாரல் தமிழ் மன்றத்தின் பொறுப்பாசிரியர் பேராசிரியர் கு.முருகேசன் அவர்களும், மேலும் சிறப்பு விருந்தினராக புலவர். திருநாவுக்கரசு. இராசகோபால் அவர்களும் வருகைதந்து விழாவை சிறப்பித்தார்கள்.



**கல்வித் துறையில் கலைஞர் அவர்கள் ஆற்றிய தொண்டுகள் பற்றி கல்லூரியின் முதல்வர் Dr.வயி.அண்ணாமலை அவர்கள் தலைமையில் விரிவாக உரை ஆற்றினார்.**

**அதனைத் தொடர்ந்து பேராசிரியர்  கு. முருகேசன் அவர்கள் கலைஞரின் சமூகநலத்திட்டங்கள், மகளிர் நலத்திட்டங்கள் பற்றியும் மேலும் விழாவின் முக்கியத்துவத்தையும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.**



**சிறப்பு விருந்தினர் புலவர்.திருநாவுக்கரசு.இராச கோபால் அவர்கள் கலைஞரின் வரலாற்றை இக்கால மாணவ, மாணவிகளுக்கு புரியும் வண்ணம் சிறப்பாக உரையாற்றினார்.**





**அதனைத் தொடர்ந்து போட்டிகள் தொடங்கின.**



கல்லூரி பேராசிரியர்கள் திரு.சிங்காரவடிவேலு, திருமதி. அன்புசெல்வி மற்றும் திரு .அண்ணாதுரை ஆகியோர் சிறப்பு விருந்தினருடன் சேர்ந்து போட்டியின் நடுவர்களாக செயல்பட்டார்கள்.

ஏராளமான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.







மாணவர்களிடையே கடும் போட்டி நிலவியது. வெற்றியாளர்களை தேர்வு செய்வதில் நடுவர்கள் சிரமப்படும் வகையில் போட்டியாளர்களின் பங்களிப்பு இருந்தது.

போட்டியாளர்களின் கருத்து கூர்மையாகவும் தெளிவாகவும் இருந்தன.

இறுதியாக இரு பிரிவுகளுக்கு , பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டியில் வென்ற மாணவர்களுக்கு முதல் பரிசு ₹1000 மற்றும் இரண்டாம் பரிசு ₹500 வழங்கப்பட்டது

**போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்கள் பட்டியல்**

| வ.எண் | மாணவர் பெயர் | வகுப்பு | போட்டி &பரிசு |
|---|---|---|---|
| **1** | **S. கிருத்திகா** | **1 வருடம் BE (CIVIL)** | **கட்டுரைப்போட்டி முதல் பரிசு** |
| **2** | **M. ப்ரீத்தி** | **2 வது வருடம் B.Tech (CHEMICAL)** | **கட்டுரைப்போட்டி இரண்டாம் பரிசு** |
| **3** | **R. கீர்த்தனா** | **1 வருடம் BE (CSE)** | **பேச்சுப்போட்டி முதல் பரிசு** |
| **4** | **S.கிஷோர்குமார்** | **2 வது வருடம் BE (MECH)** | **பேச்சுப்போட்டி இரண்டாம் பரிசு** |









**இவ்விழாவின் மூலம் கலைஞர் அவர்களின் வாழ்கை வரலாற்று குறிப்புகள் மற்றும் பொதுவாழ்வில் அவர் ஆற்றிய சமூகப்பணிகள் மாணவர்களிடயே ஆழமாக சென்றுசேர்ந்ததை காண முடிந்தது.**

**நன்றியரையுடன்,மாணவர்கள் அனைவரும் விடை பெற்றனர்.**